**செய்தி வெளியீடு எண்: 762** **நாள்: 23.10.2018**

# செய்தி வெளியீடு

அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் உள்ள 329 இளநிலை பயிற்சி அலுவலர் காலியிடங்களை பூர்த்தி செய்யும் பொருட்டு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையரகத்தால் 16.02.2016 அன்று நாளிதழ்களில் அறிவிப்பு வெளியிடப்பட்டது. தகுதியுள்ள அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் 21.02.2016 அன்று முதனிலைத் தேர்வு நடத்தப்பட்டது. இத்தேர்வின் முடிவுகள் 03.03.2016 அன்று இணையதளத்தில் வெளியிடப்பட்டது. அடுத்த கட்ட தேர்வுகளுக்கு தற்காலிமாக தெரிவு செய்யப்பட்டோர் பட்டியலும் இதே இணையதளத்தில் வெளியிடப்பட்டது. இதில் ஒவ்வொரு தொழிற் பிரிவிலும் / பொறியியல் பிரிவுகளிலும் 35% மேல் மதிப்பெண் பெற்றவர்களில் பட்டியல் மட்டுமே வெளியிடப்பட்டது. சில தொழிற் பிரிவுகள் / பொறியியல் பிரிவுகளில் 1 : 5 என்ற விகிதத்தில் போதுமான நபர்கள் இல்லாததால் தற்போது 35 சதவிகிதம் என்ற மதிப்பெண் வரம்பு தளர்த்தப்பட்டு அனைத்து தொழிற் பிரிவுகளிலும் / பொறியியல் பிரிவுகளிலும் அனைத்து இனத்தவர்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள காலியிடங்களை பூர்த்தி செய்யும் பொருட்டு தகுதியுள்ள நபர்கள் கூடுதலாக அடுத்தக் கட்ட தேர்வுகளுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்த பணி நியமனத்தில் அடுத்த கட்ட தேர்வுகள் கீழ்கண்டவாறு நடத்தப்பட உள்ளன.

1. Practical Skill Test
2. Teaching Ability Test
3. Personal Interview

இத்தேர்வுகள் பிற அரசு துறை அதிகாரிகள் அடங்கிய தேர்வுக் குழுவால் வெளிப்படையாகவும், முறையாகவும் நடத்தப்படவுள்ளன. தொழிற் நுட்ப கல்வி இயக்குநரகம், தொழிற்சாலை பாதுகாப்பு இயக்குநரகம் மற்றும் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையைச் சார்ந்த அதிகாரிகள் இத்தேர்வுக்குழுக்களில் இடம் பெறுவர். மதிப்பெண்கள் தேர்வரின் தகுதிகள் மற்றும் திறன்களுக்கேற்ப கீழ்கண்டவாறு தேர்வுக் குழுவால் வழங்கப்படும்.

**Allocation of Marks for each Category.**

| Sl. No. | Category | Marks to be allotted |
|---|---|---|
| 1. | Technical Qualification Marks | 30 |
| 2. | Practical experience | 5 |
| 3. | Period of wait after registration in the Employment Exchange | 5 |
| 4. | Practical Skill cum Teaching Ability Test | 40 |
| 5. | Interview | 20 |

1. Practical Skill Test : இத்தேர்வில் தேர்வருக்கு அவர் பயின்ற பொறியியல் பிரிவு / தொழிற் பிரிவு தொடர்பாக ஒரு செய்முறை பயிற்சி வினாத்தாள் வழங்கப்படும். அந்த வினாத்தாளில் கொடுக்கப்பட்டுள்ள செய்முறையை தொடர்புடைய இயந்திரங்கள், தளவாடங்கள் மற்றும் கருவிகளை பயன்படுத்தி அவர் செய்து முடிக்க வேண்டும். செய்முறை தேர்வுக்கான நேரம் வினாத்தாளில் கொடுக்கப்பட்டிருக்கும். இதற்கான மதிபெண்கள் 20 ஆகும். உற்பத்தி சார்ந்த தொழிற் பிரிவுகளில் செய்முறை தேர்வுக்கு அதிகப்பட்சமாக 4 மணி நேரம் வழங்கப்படும். சேவை சார்ந்த தொழிற் பிரிவுகளுக்கு வினாத்தாளில் கொடுக்கப்பட்டுள்ள செய்முறையை பொறுத்து ஒரு மணி நேரம் முதல் 2 மணி நேரம் வரை வழங்கப்படும். எனினும் வினாத்தாளில் கொடுக்கப்பட்டுள்ள தேர்வு நேரமே இறுதியானது. ஒவ்வொரு தேர்வரும் இதில் வெளிப்படுத்தும் திறனுக்கேற்ப தேர்வுக் குழுவினரால் அவரது செய்முறை அளவீடு செய்யப்பட்டு மதிப்பெண்கள் வழங்கப்படும்.

2. Teaching Ability Test : ஒவ்வொரு தேர்வருக்கும் அவர் பயின்ற தொழிற் பிரிவு / பொறியியல் பிரிவில் ஏதேனும் ஒரு பாடம் தேர்வுக் குழுவால் வழங்கப்படும். அந்த பாடத்தை அவர் தொழிற் நிலைய மாணவர்களுக்கு வகுப்பறையில் நடத்த வேண்டும். அப்போது தேர்வு குழுவினரும் அங்கிருந்து அவர் பாடம் நடத்தும் விதம், தொழிற் நுட்ப அறிவு, மாணவர்களுக்கு விளக்கம் அளிக்கும் விதம் ஆகியவற்றை

அளவீடு செய்து அவருக்கு மதிப்பெண்கள் வழங்குவர். இத்தேர்விற்கு அதிகப்பட்ச மதிபெண் 20 ஆகும்.

3. Personal Interview : ஒவ்வொரு தேர்வரும் தேர்வுக் குழு முன் நேர்காணலுக்காக ஆஜராக வேண்டும். நேர்காணலில் தேர்வரின் அவரது அடிப்படை அறிவு (Basic Knowledge), தொழிற் நுட்ப அறிவு (Technical Knowledge), அணுகுமுறை (Attitude), நடத்தை (Conduct), தொடர்புத் திறன் (Communication Skills) ஆகியவை அளவீடு செய்யப்பட்டு தேர்வுக் குழுவால் மதிபெண்கள் வழங்கப்படும். இதற்கான அதிகப்பட்ச மதிப்பெண் 20 ஆகும்.

இந்த மூன்று தேர்வுகளிலும் தேர்வர் பெறும் மதிப்பெண்கள் அடிப்படையிலும், அவரது பட்டயம் / சான்றிதழ் படிப்பில் பெற்றுள்ள மதிப்பெண்கள், பணி அனுபவம், வேலைவாய்ப்பு அலுவலக பதிவு மூப்பு ஆகியவற்றின் அடிப்படையிலும். (தகுதி அடிப்படையிலும், திறன் அடிப்படையிலும்) தேர்வு செய்யப்பட்டோர் பட்டியல் இத்துறையால் வெளியிடப்படும்.

இத்தேர்வுகள் அனைத்தும் முறையாகவும், வெளிப்படையாகவும் நடைபெற அனைத்து ஏற்பாடுகளும் இத்துறையால் செய்யப்பட்டுள்ளது. அடுத்தக் கட்ட தேர்வுகள் குறித்த விரிவான விளக்கம் www.skilltraining.tn.gov.in என்ற இணையதளத்தில் தற்போது வெளியிடப்பட்டுள்ளது.

ஆணையர்
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**